

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.08.2024) தலைமைச் செயலகத்தில், நிதித்துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும் கருவூலக் கணக்குத் துறையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் கணக்கர் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 537 நபர்களுக்கும், கருவூலக் கணக்குத் துறையில் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான பணியாளர்களின் 10 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையிலும், பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் உதயச்சந்திரன், நிதித்துறை செயலர் (செலவினம்) எஸ்.நாகராஜன், கருவூலக் கணக்கு ஆணையர் கிருஷ்ணனுன்னி ஆகியோர் உள்ளனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு 100 ரூபாய் நாணயத்தை ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ அவர்களிடம் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, தலைமை நிலையச் செயலாளர் துறைமுகம் காஜா ஆகியோர் வழங்கிய காட்சி.

### விழுப்புரம் மாவட்டம் - செஞ்சி ஒன்றியத்தில்

# அரசு பள்ளிகளில் விரைவில் இரவு காவலர்கள் நியமனம்!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தகவல்!

செஞ்சி, ஆக. 22 -

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் நல்லான் பிள்ளை பெற்றாள்அரசு மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி திடீர் ஆய்வு மேற்கொண்டார்.



அப்போது வகுப்பறைகளுக்குச் சென்றஅமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி மாணவர்களிடத்தில் கற்றல் கற்பித்தல் திறன் குறித்து கேட்டறிந்து ஆய்வு மேற்கொண்டார்.

மேலும் பள்ளி மாணவர்களுக்கு ஆசிரியர்கள் சொல்லிக் கொடுக்கும் பாடங்கள் புரியும் வகையிலும் அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் அளித்து அவர்களுடைய கற்றல் கற்பித்தலை மேம்படுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து ஹை டெக் வகுப்பறைக்குச் சென்ற அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அங்கு மாணவர்களுக்கு ஆசிரியர் நடத்தும் பாடத்தை ஆய்வு மேற்கொண்டார்.

அப்போதுவகுப்பறையில்பாடம் நடத்திய பின் மாணவர்களிடத்தில் பேசிய அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி மாணவர்களுக்குபாடத்தில் ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால் உடனடியாக தயக்கமின்றி ஆசிரியர்கள் இடத்தில்சந்தேகங்களை கேட்டு அதை தெரிந்து கொண்டுபடித்து

அரசு நடத்தும் பொது தேர்வில் பங்கேற்று அனைவரும் சிறந்த மதிப்பெண் எடுக்க வேண்டும்,மாணவர்களிடத்தில் கேள்வி கேட்கும் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

மேலும் உயர்கல்வி படித்து அரசு துறைகளிலும் போட்டித் தேர்வு மூலமாகவும் பல்வேறு வேலை வாய்ப்பு நிறுவனங்கள் நடத்தும் நேர்முகத் தேர்வில் பங்கேற்று வேலை வாய்ப்புகளை தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டுமென அவர் அறிவுறுத்தினார்.

தொடர்ந்துசெய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆட்சி மாற்றத்தின் பிறகு அதிகப்படியாக மாணவர்கள் அரசு பள்ளியை நோக்கி வருகின்றனர்.

அங்கன்வாடி மையத்திலிருந்து சுமார் 3 லட்சத்து 30 ஆயிரம் மாணவர்கள் அப்படியே அரசு பள்ளியில் சேர்ந்து உள்ளனர் .கூடுதலாக மற்ற பள்ளியில் இருந்தும் மாணவர்கள் அரசு பள்ளியில் சேர்ந்துள்ளனர்.

தமிழ்ப் புதல்வன், புதுமைப்பெண் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை கொண்டு வந்ததால் அரசு பள்ளியில் மாணவர்கள் சேர்க்கை அதிகரித்துள்ளது.

கடந்த காலத்தில் நிறைய மாணவர்கள் சேர்க்கை மட்டுமேஎன்பது பெருமை கிடையாது அந்த மாணவர்களுக்கு தேவையான கட்டமைப்புகளை உருவாக்கிக் கொடுப்பது அரசின்கடமை என தெரிவித்தஅமைச்சர் அன்பின் மகேஷ் பொய்யாமொழி விரைவில் பள்ளிகளில் பற்றாக்குறையாக உள்ள ஆசிரியர் பணியிடங்கள் நிரப்புவதற்கும் அரசு பள்ளிகளில் இரவு காவலர்கள் நியமனம் செய்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்தார்.

முன்னதாக பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி,சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான்,சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் சிற்றரசு ஆகியோர் மரக்கன்றுகளை நட்டு வைத்தனர். இதில் மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், விஜயராகவன், பச்சையப்பன், துணை சேர்மன் ஜெயபாலன்,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், மாவட்ட பிரதிநிதி கதிரவன் ,உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தியின் முன்னோடி முயற்சிகள்

# நமது வளர்ச்சிக்கு வழிகாட்டியாக உள்ளன!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

**சென்னை, ஆக, 22 -**

**முன்னாள் பிரதமர் ராஜிவ்காந்தி அவர்களின் முன்னோடி முயற்சிகள் நமது வளர்ச்சிக்குத் தொடர்ந்து வழிகாட்டியாக விளங்கி வருவதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புகழாரம் சூட்டியுள்ளார்.**



இது தொடர்பாக முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி அவர்களின் 80ஆவது பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி அவர்களின் 80ஆவது பிறந்தநாளில், அவர் நம் நாட்டுக்கு ஆற்றிய சிறப்பான பங்களிப்புகளை நினைவுகூர்கிறோம்.

நவீன, தொழில்நுட்பத்தில் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற அவரது கனவும், அதற்கான அவரது முன்னோடி முயற்சிகளும் நமது வளர்ச்சிக்குத் தொடர்ந்து வழிகாட்டியாக விளங்கி வருகின்றன.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

### துக்ளக் நிறுவனர்

# சோ ராமசாமியின் மனைவி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக, 22 -

'துக்ளக்' நிறுவனரும் மூத்த பத்திரிகையாளருமான சோ இராமசாமி அவர்களின் மனைவி திருமதி சௌந்திரா ராமசாமி அவர்கள் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். இச்செய்தியறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

துக்ளக் நிறுவனரும் மறைந்த மூத்த பத்திரிகையாளருமான சோ ராமசாமி அவர்களின் மனைவி திருமதி. சௌந்தரா ராமசாமி அவர்களின் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:

துக்ளக் நிறுவனரும் அப்பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்து மறைந்த மூத்த பத்திரிகையாளர் சோ ராமசாமி அவர்களின் மனைவி திருமதி. சௌந்தரா ராமசாமி அவர்கள் மறைந்த செய்தி அறிந்து மிகுந்த வருத்தமடைந்தேன். அவரது மறைவிற்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சோ அவர்கள் தனது வாழ்நாளில் பத்திரிகை உலகிலும், திரைத்துறை மற்றும் பொது வாழ்விலும் தனி முத்திரை பதித்ததற்கு உற்ற துணையாக இருந்த திருமதி. சௌந்தரா ராமசாமி அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.




திராவிட முன்னேற்ற கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதியார் அவர்களின் ஆணைப்படி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக அனைத்து அணிகளைச் சேர்ந்த மாவட்ட தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் தலைமையில் கிருஷ்ணகிரியில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சந்திரன், சாவித்திரிமூர்த்தி, பொருளாளர் கதிரவன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் பரிதா நவாப், செந்தில், கிருபாகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் அஸ்லாம், பாலன், நாகராசன், சித்ரா சந்திரசேகர், கோதண்டன், கிருஷ்ணகிரி நகர செயலாளர் நவாப், ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன், தனசேகரன், தேங்காய் சுப்பிரமணி,மகேந்திரன், சாந்தமூர்த்தி, அறிஞர், ராஜேந்திரன், நரசிம்மன், குண.வசந்தரசு, ரஜினி செல்வம் , எக்கூர் செல்வம், குமரேசன், பேரூர் கழக செயலாளர் பாபு, தம்பிதுரை, வெங்கடப்பன், பேரூர் கழக பொறுப்பாளர் பார்த்திபன் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத்தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

# கலைஞரும் தமிழும் போல, வாழ்க!

## கே.பி. சங்கர் எம்.எல்.ஏ. இல்லத் திருமண விழாவில்

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை,ஆக.22-**

**சென்னை, திருவொற்றியூரில், கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில்,மாநில மீனவர் அணித் துணைத்தலைவர் கே.பி. சங்கர் மகன் பி.எஸ்.திலீபனுக்கும் வி.விசாலிக்கும், நேற்று திருமணம் நடைபெற்றது. இதில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்திப் பேசினார்.**

**இதில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:**

கே.பி.சங்கர் அவர்களின் இல்லத் திருமண விழா ஒரு திருமண விழாவாக மட்டும் இல்லாமல் கிட்டத்தட்ட கழகத்தின் நிகழ்ச்சியைப் போல மிகச் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. இந்தப் பகுதியில் நம் கழகத்திற்காக என்றென்றும் உழைத்துக் கொண்டிருப்பவர். அவர் மட்டும் இல்லை, அவரின் தந்தை பரசுராம் அவர்களும் கழகத்திற்காகத் தன் உழைப்பைக் கொடுத்தவர்.

அவரின் அண்ணன் சாமி அவர்களும் இறுதி மூச்சு வரை கழகத்திற்காகப் பாடுபட்டவர். அவரின் வழியில் அண்ணன் சங்கர் அவர்களும் தொடர்ந்து கழகப் பணியில் ஈடுபட்டு சிறந்த சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். இங்கு முதலமைச்சர் வந்திருக்கிறார்கள்.

சட்டமன்ற உறுப்பினர்கள் வந்திருக்கிறார்கள், அமைச்சர்கள் வந்திருக்கிறார்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், கழகத்தினரெல்லாம் இவ்வளவு பெருந்திரளாக தங்களது குடும்ப நிகழ்ச்சி போல உரிமையோடு வந்திருக்கிறீர்கள் என்றால், அந்தளவிற்கு அண்ணன் சங்கர் அவர்கள் பாசமுள்ளவர். மனதில் ஒன்றையும் பேச்சில் ஒன்றையும் வைத்துக்கொண்டு பேசமாட்டார். மிகவும் வெளிப்படையானவர். அடிக்கடி கோபப்படுவர். அவர் கோபப்படுவார் என்ற பயத்திலேயே இங்கு திருமணத்திற்கு வந்திருக்கீர்கள் என்றால், அண்ணன் சங்கர் அவர்கள் கழகப் பணியைச் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறார் என்று அர்த்தம்.

இங்கு வந்திருக்கிற அத்தனைப் பேருக்கும் முதலில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் நம் முதலமைச்சர் தலைமையிலான கழகக் கூட்டணிக்கு, தமிழ்நாட்டு மக்கள் 40க்கு 40 வெற்றியைக் கொடுத்து மிகப்பெரிய ஒரு அங்கீகாரத்தை நம் முதலமைச்சர் அவர்களுக்கும், கழக அரசிற்கும் கொடுத்திருக்கிறார்கள்.

குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்றால், இந்தவடசென்னைப் பகுதியில் வடசென்னை



மக்களாகிய நீங்கள், மீனவ சமுதாய மக்களான நீங்கள் நம் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி அவர்களுக்குக் கிட்டத்தட்ட 3 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிப் பெற வைத்துள்ளீர்கள். அதற்கு இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### நம்பிக்கையும் எதிர் பார்ப்பும்!

தொடர்ந்து 10 தேர்தல்களில் நம் தலைவர் அவர்களுக்கு நம் தமிழக மக்கள் வெற்றியைக் கொடுத்திருக்கிறார்கள் என்றால், நம் தலைவர் அவர்களின் மீதும், அரசின் மீதும் வைத்திருக்கக்கூடிய அந்த நம்பிக்கையும் எதிர்ப்பார்ப்பும்தான் காரணம்.

தாய்மார்கள் நிறைய பேர் வந்திருக்கிறீர்கள். எனவே, இரண்டு மூன்று விஷயங்களை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். தலைவர் அவர்களின் ஆட்சியில், அதிகமாகப் பயன்பெற்றது யார் என்று பார்த்தால், தாய்மார்கள்தான்.

அதுவும் சென்ற தேர்தலில் தாய்மார்களின் வாக்கு, எதிர்பார்ப்பு, நம்பிக்கை நம் கழகத்தின் மீதும், முதலமைச்சர் மீதும் மிகப் பெரிய அளவில் திரும்பியிருக்கிறது. அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு, தலைவர் அவர்கள் தொடர்ந்து நிறைவேற்றி வருகிற திட்டங்கள்.

### 500 கோடி பயணங்கள்

முதல் திட்டம், நம் தலைவர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்று முதல் கையெ முத்துப் போட்ட மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து வசதித் திட்டம். இந்த மூன்று வருடத்தில் மட்டும் மகளிர் மொத்தம் 500 கோடி பயணங்களை இந்தத் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முழுவதும் மேற்கொண்டுள்ளார்கள்.

ஒவ்வொரு தாய்மாரும் சுமார் 1,000 ரூபாய் மாதா மாதம் சேமிக்கிறார்கள். அதே போல் இன்னொரு திட்டம். புதுமைப்பெண் திட்டம். பெண்கள் வீட்டை விட்டு வெளியே வரவேண்டும். படிக்க வேண்டும். உயர் கல்வி படிக்க வேண்டும் என்று, அரசுப் பள்ளியில் படித்து எந்தக் கல்லூரிக்குச் சென்று படித்தாலும் அவர்களுக்குக் கல்வி ஊக்கத் தொகையாக புதுமைப்பெண் என்ற திட்டத்தை மாதா மாதம் கல்வி ஊக்கத்தொகையாக நம் திராவிட மாடல் அரசு, நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

### 'தமிழ்ப் புதல்வன்' திட்டம்!

ஆகஸ்ட் மாதத்திலிருந்து ஆண்கள், மாணவர்களும் அதிகம் படிக்க வேணடும் என்று தமிழ்ப் புதல்வன் என்ற திட்டத்தையும் தொடங்கி வைத்துள்ளார்கள். இதன் மூலம் வருடா, வருடம் 6 லட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெறுகிறார்கள்.

குழந்தைகள் படிக்க பள்ளிக்கூடத்திற்கு வர வேண்டும் என்று காலை உணவுத் திட்டம். ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய அனைத்து மாணவர்களும் பசியோடு இருக்கக்கூடாது, அவர்கள் வயிறார சாப்பிட வேண்டும் என்று முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். திங்கள் முதல் வெள்ளி வரை ஒவ்வொரு நாளும் 22 லட்சம் குழந்தைகள் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் மூலம் பயன்பெறுகிறார்கள்.

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே 16 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தை அறிவித்துச் செயல்படுத்தியவர்தான் நம் தலைவர் அவர்கள்.

எனவே, நம் கழகத் தலைவர் தலைமையில் இந்தத் திருமணம் நடந்திருக்கிறது. மணமக்களுக்கு மீண்டும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டு, மணமக்கள் நீங்கள் இருவரும் சிறப்பாக ஒவ்வொருவரின் சுயமரியாதை யை விட்டுக்கொடுக்காமல், உங்களின் உரிமைக்கு எப்போதும் குரல்கொடுத்து கலைஞரும் தமிழும் போல, நம் தலைவரும் தமிழ்நாடும் போல வாழ வேண்டும் என்று கூறிக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### மேல்மலையனூரில்

# 167 பேருக்கு கலைஞர் கனவு திட்ட வீடுகள்!

## அரசாணைகளை அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்!

செஞ்சி, ஆக. 22-

விழுப்புரம் மாவட்டம் ஊரக வளர்ச்சி துறை சார்பில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் மேல்மலையனூர் ஒன்றியத்தில் உள்ள கிராமங்களில் வீடுகள் கட்டுவதற்கான ஆணைகள் வழங்கும் நிகழ்ச்சி மேல்மலையனூரில் நடைபெற்றது.

மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமையில்நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு 5 கோடியே 84லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 167 பயனாளிகளுக்கு வீடுகள் கட்டுவதற்கான உத்தரவு ஆணைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

அப்போது நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான் :

இந்தியாவிலேயே முதன் முதலில் தீப்பி டிக்காத கான்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்த்தினை முதலில் அறிமுகப்படுத்தியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர்.

அவர் வழியில் இன்று திராவிட மாடல் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் இன்றைக்கு கலைஞர் கனவு இல்லம் வீடுகள் கட்டும் திட்டத்தில் தமிழக முழுதும் 1 லட்சம் வீடுகள் கட்டுவதற்கும் விழுப்புரம் மாவட்டத்தில் 4700 வீடுகள் கட்டுவதற்கு உத்தரவிட்டுள்ளார்.

ஒன்றிய அரசு தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு கொடுக்கும் நிதியை காட்டிலும் 2 மடங்கு கூடுதலாக தொகை கொடுத்து கிராமத்தில் தொகுப்பு வீடுகளை கட்டுவதற்கு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், சாந்தி சுப்பிர மணியன், ஒன்றிய துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், மாவட்ட கவுன்சிலர் செல்வி ராமசரவணன்,ஒன்றிய கவுன்சிலர் யசோதரை சந்திரகுப்தன் ஊராட்சி மன்ற தலைவர் வெங்கடேசன், உள்ளிட்ட ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


## கோயம்புத்தூர் மாநகராட்சி

பொறியியல் பிரிவு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e-tendering)

ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.(e)2/2024 நாள் : 19.08.2024

| வ.எண். | பணியின் விபரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண். 32, 48, 70, 80 மற்றும் 82-க்குட்பட்ட பகுதிகளில் மழை நீர் வடிகால், கான்கிரீட் தளம், கட்டிட பணி, தூர்வாருதல் மராமத்து பணி, அபிவிருத்தி பணி மற்றும் பாதாள சாக்கடை பணிகள் | 10 பணிகள் | 29.08.2024 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock) | 30.08.2024 பிற்பகல் 4.00 மணி (As per the Server Clock) |

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர் - 1. தொலைபேசி எண். 0422 2396026. Email : commr.coimbatore@tn.gov.in

உதவி ஆணையாளர், மத்திய மண்டலம்,
கோயம்புத்தூர் மாநகராட்சி

வெ.ஆ.எண். 433/செ.ம.தொ.அ/கோவை/நாள் : 20.08.2024




கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் ஒன்றியம் பழைய சிறுவங்கூர் ஊராட்சியில் மக்களுடன் முதல்வர் திட்டம் முகாமில் தெற்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்று நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார், இதில் அரசு அதிகாரிகள், பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பொதுமக்கள் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கிளை கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.